Registered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 15—No. 4

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "

| மலர் 15 | சித்திரபானு ஆண்டு சித்திரைத் திங்கள் 1942ஞ ஏப்ரல்மீ | இதழ் 4 |
|---|---|---|

உள்ளுறை — பக்கம்.

காமாட்சி திருமணம் ... 161
ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தலைமையுரை ... 168
சைவ இளைஞர் மகாநாடு ... 168
இவ்வாண்டின் சமாஜ உத்தியோகஸ்தர்கள் ... 171
திருநீறு ... 173
இப்போது நாம் செய்யவேண்டியதென்ன? ... 193
நக்கீரரும் திருமுருகாற்றுப்படையின் பெருமையும் ... 197
சீவக சிந்தாமணியும் சைவமும் ... 206

திரு. வி. உலகநாத முதலியார்

[சி]த்தாந்த மகாசமாஜம்

லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்[னை]

# ஞானியார் சுவாமிகள் நினைவு நிதி

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளுடைய நினைவு நிதிக்குக் கீழே குறித்துள்ள அன்பர்கள் பொருளுதவி புரிந்துள்ளார்கள். ஏனைய அன்பர்களும் விரைவில் தாங்கள் விரும்பிக் கொடுக்கக் கருதும் பொருளை விரைவில் கொடுத்து உதவி புரியுமாறு வேண்டுகிறேன்.

| திருமிகு | | ரூ. | அ. |
|---|---|---|---|
| க. அரங்கசுவாமி முதலியாரவர்கள் | ... | 108 | 0 |
| அ. கு. காமாக்ஷியம்மையாரவர்கள் | ... | 100 | 0 |
| மயிலைகிழார் இளமுருகனாரவர்கள் | ... | 100 | 0 |
| திவான்பகதூர்-டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்கள் | | 50 | 0 |
| ராவ்பகதூர்-சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் | | 50 | 0 |
| ராவ்சாஹிப்-எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் | ... | 50 | 0 |
| ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் | ... | 25 | 0 |
| மு. அருணாசலம் பிள்ளையவர்கள் | ... | 20 | 0 |
| தெ. பழ. சித. சதாசிவம் செட்டியாரவர்கள் | ... | 16 | 0 |
| தி. க. சுந்தரம் பிள்ளையவர்கள் | ... | 10 | 0 |
| கா. இராமநாதன் செட்டியாரவர்கள் | ... | 6 | 4 |
| கொழும்பு அருள் தியாகராசா அவர்கள் | ... | 5 | 0 |
| என். எஸ். இரத்தினசபாபதி செட்டியாரவர்கள் | ... | 5 | 0 |
| | ஆக | 545 | 4 |

ம. பாலசுப்பிரமணியன்,

காரியதரிசி.

## சமாஜப் பொதுக்கூட்ட அறிக்கைகள்

1. இப்போதுள்ள யுத்த நிலைமையில் சமாஜப் பொருட் பாதுகாப்புக்காகச் சமாஜ விதிகளில் சில திருத்தங்கள் செய்வதற்குச் சமாஜ அவசரப் பொதுக்கூட்டம் ஒன்று இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் குகாநந்த நிலையத்தில் 1942ஆம் ஏப்ரல்மீ 12உ ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குக் கூடும். அப்போது போதிய கூட்ட நிறைவெண் இல்லாவிடில் அக்கூட்டம் அடுத்தநாள் மாலை அதே இடத்தில் அதே மணிக்குக் கூடி வருபவர்களைக் கொண்டு தீர்மானித்து முடிக்கும்.

Reg. M. 2330

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானதுந வாணியைஉள் நாடு.

மலர் 15 | சித்திரபானு ஆண்டு சித்திரைத் திங்கள் 1942ஞு ஏப்ரல்மீ | இதழ் 4

## காமாட்சி திருமணம்*

[ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்]

உலகங்கண்ட அறிவினுயர்ந்தோர் உலகங்கொண்டே இவ்வுலகத்தைப் படைத்துக் காத்து ஒடுக்கும் கடவுள் ஒருவர் உண்டென்று நிச்சயிக்கின்றனர். அக்கடவுள், உண்மை அறிவு இன்பம் ஆம் வடிவுடையார். அவர் எங்கும் இருப்பவர்; எக்காலத்தும் இருப்பவர்; எல்

*இது தைப்பூசத்தன்று பரிபூரணம் எய்திய ஸ்ரீலஸ்ரீ சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் திரிசிராப்பள்ளியில் நடைபெற்ற திருவளர் செல்வி - ர. காமாட்சியம்மையார் திருமணத்தில் வழங்குவதற்கெனத் தமது திருக்கரத்தால் எழுதி அச்சிடுவித்த கட்டுரை. சுவாமிகள் கடைசியாக எழுதிய கட்டுரை இஃதேயாகும்.

லாஞ் செயவல்லவர் ; எல்லாம் அறிபவர். பலவான் சத்திமான் என்று உலகிற் பேசப்படுவதை நிகர்த்துக் கடவுளும் சத்திமான் எனப்படுவர். கடவுள் ஒருவரே சத்திமான் சத்தி என இருகூருயினர். "பெண்ணுகிய பெருமான்" என்ருர் ஞானசம்பந்தர். "பெண்ணுகி ஆணுய்" என்ருர் மாணிக்கவாசகர். இன்பங் குறைந்த-நிறைந்த துன்பமுடைய உயிர்களாகிய நாம் ஆண் பெண் ஆம் இரண்டுருவம் எடுத்திருத்தலால் நம்மைக் காக்க, அவரும் ஆண் பெண் ஆம் உருவம் இரண்டு கொண்டனர். போகத்தையும் மோக்ஷத்தையும் உயிர் கட்குத் தருபவர். அவர் கோர வடிவங்கொண்டு உயிர் களின் வினையைப் போக்குவர் ; யோக வடிவங்கொண்டு யோக ஞானங்களைத் தருவர். அவர் போக வடிவங் கொண்டு போகத்தை யூட்டுவர். உயிர்களாகிய நாம் போகம் அனுபவித்தற்காக அவர் போகி ஆகின்றனர்.

"தொண்டனேன் புணருமா புணரே"

"தொண்டனேன் விரும்புமா விரும்பே"

"தொண்டனேன் நினையுமா நினையே"

என்பவை திருவிசைப்பா.

"போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப்
புரித லோரார்"

என்பது சித்தியார்.

"ஒருமுகம்,
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே"

என்பது திருமுருகாற்றுப்ப[illegible]நுகர்ச்சியில்லாத

இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான், உலகில் இல் வாழ்க்கை நடத்தற்கென் றுணர்க" என்பது மேற் கண்ட திருமுருகாற்றுப்படை யடிக்கு நச்சினார்க்கினியர் கூறிய விசேடவுரை.

" ஒருகை, நீணிற விசும்பின் மலிதுளி பொழிய,
ஒருகை, வானர மகளிர்க்கு வதுவை சூட்ட "

என்பது திருமுருகாற்றுப்படை.

மேற்கூறிய அடிகளின் நச்சினார்க்கினியர் விசேட வுரை: " என்றது, வள்ளியொடு நகையமர்ந்த முகம் உல கிற்கு இல்வாழ்க்கை நிகழ்த்துவித்ததாகலின் அவ்வில் வாழ்க்கை நிகழ்த்துதற்கு மழையைப் பெய்வித்தது ஒருகை, ஒருகை இல்வாழ்க்கை நிகழ்த்தற் பொருட்டு மணமாலையைச் சூட்டிற்று என்றவாறு" ஆம்.

உயிர்களாகிய நாம் திருமணஞ்செய்து சுத்தபோகத் தைத் துய்த்துப் போகத்தின் தன்மை இத்தன்மைத் தென்று உணர்ந்து, மும்மலத்தினின்றும் நீங்கி முழு இன்பத்தையும் பெறுதற்காகவே கடவுளும் ஆணும் பெண்ணுமாகி மணஞ்செய்து கொண்டனன்.

" வியனுலகம் வாழச்
செவ்வண்ணப் பெருமானார் மணவினையிற்
றிருவுள்ளம் பற்றினரால் "

" மண்டா ணவத்தின் தருக்கிரித்து
மாறா இன்பப் பெருவாழ்வு
கண்டார் கதுவ அருள்கொழிக்குங்
கவுரி மணத்தின் திறம்புகல்வாம் "

என்பன காஞ்சிப் புராணம், காமாட்சியம்மையார் தழு வக் குழைந்த படலத்திலும் திருமணப்படலத்து முள்

ளவை. எனவே, கடவுள் மணஞ்செய்துகொண்டு நம்மை மணஞ் செய்விக்கின்றார் என்பது பெறப்படும்.

### நம் நிமித்தம் ஸ்ரீ ஏகாம்பரநாதனுர் செய்துகொண்ட
## காமாட்சி திருமணம்

உலகெலாம் உய்தற்காக மந்தரமலையில் பெருமான் எழுந்தருளிய காலத்தில் விளையாட்டாகப் பின்புறம் வந்து பெருமாட்டி, பெருமான் கண்களைப் புதைத்தாள்; உலகங்கள் இருண்டன; கலவியின்பந் தொலைந்தன; நூற்கேள்வி மயங்கின; அறிவின் தேர்ச்சி மறந்தன; கடவுட் பூஜை துறந்தன உலகமெல்லாம். பலர் வேண்ட அம்மை கரங்களை விட்டாள். விழி திறந்தார் ஐயர். அம்மையைநோக்கி "எமது விழியை நீ புதைத்ததால் கடவுட் பூசை முதலிய நல்லவை நிகழவில்லை. அதனால் தீமை நின்னை உற்றது. நீ பிராயச்சித்தம் செய்துகொளல் வேண்டும். எமை யருச்சித்தல், எமை நினைத்தல், எமைத் துதித்தல், எம்பேர் செப்பல், எம்அடியரை வழிபடல் இவைகளே எவ்விதத் தீமையினையும் நீக்கும் பிராயச் சித்தங்கள். ஆதலின் சால நமக்கினிய காஞ்சீபுரஞ் சென்று நம்மைப் பூசித்தல் முதலியன செய்" என்று ஏவ, அம்மையும் தாதிகளோடு காஞ்சியையடைந்தனள். உமாபத்திரம் எனும் தீர்த்தம் அடைந்து முழுகித் திருநீறணிந்து, உருத்திராக்ஷம் பூண்டு, பஞ்சாக்ஷரம் சொல்லி இறைவனையடைந்து தரிசித்தாள்; பூசித்தாள்; முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தாள். இங்ஙனம் நிகழும் நாள்களுளொருநாள் எப்போதும்போலக் கம்பையாற்றின் நடுவில் பூசிப்பாள். ஒரு திருவிளையாடலைச் செய்ய இறைவர் எண்ணினார். உலகிலுள்ள எல்லாத் தீர்த்தங்களும் அக்கம்பையில் வர எண்ணினார். வந்தது வெள்

ளம். மலையிற் படும் வளங்கள் முதலியவற்றை வாரிவரும் வெள்ளங் கண்டு அம்மை பயந்தாள். "விடையவன் பூஜை மத்தியில் வந்ததே. எம்பிரான்மிசை நண்ணுமே. இனிச்செய்வதென்" என அன்பால் எண்ணி; ஒரு கொடியிலுள்ள இரண்டு கொழுந்துகள் ஒரு மலைச் சிகரத்தை இருபுறமும் தழுவினாற்போன்று பூசாவேதி யில் தன் வல முழந்தாளை ஊன்றி இருகையாலும் ஏகாம்பரநாதராம் தன் கணவரைத் தழுவிக் கொண் டாள் காமாட்சி அம்மை. தழுவவே பெருமான் திருவுரு குழைந்தது. வளைத் தழும்பினோடு முலைச் சுவடு அணிந்தார் ஐயர். உலகமெலாங் களித்தன. அம்மை பூசித்த இலிங்க வடிவத்தினின்று இறைவன் உருக்கொடு தோன்றி அம்மையைக் கண்டு "மகிழ்ந்த னம்" என்றார். இறுகக் கட்டிய இரண்டு கைகளையும் விட்டுக், குவித்துக், கும்பிட்டுத் தோத்திரிப்பாள். இறைவன், "காளீ" (கரிய நிறமுடையவளே) என அழைத்து, "வேண்டியது கேள்" என்றனன். இக் காஞ்சி வசிப்போர் நாற்பயனும் பெறவேண்டும் எனக் கேட்டனள். அங்ஙனமே இறைவன் அருளி, "இன்னும் வேண்டியதைக் கேள்" என்றனன்.

அப்பொழுது அம்மையார் "காளீ என்றழைத்தருளி னீர் முன்னே மந்தர மலையில். அங்ஙனமே இப்பொழு தும் அழைத்தீர். காளி (கருநிறமுடையவள். காளம் - கருமை) எனும் பெயர் நீங்கக் கவுரி (கவுரம் - பொன், கவுரி - பொன்னிற முடையவள்) என அடியேன் பெயர்பெற அருளல் வேண்டும்" என்றனள். அங்ங னமே இறை அருளினன். கருநிறம் நீங்கிப் பொன்னிறம் பெற்றாள். காளி என்பது போய் கவுரி என்றழைக்கப் பட்டாள் காமாட்சி. இறைவர் "முன்பே குறு மூன்

வன் வேண்டினுன். நாமும் வரந் தந்துளோம். இக் காஞ்சியில் பங்குனிமாத உத்திர நக்ஷத்திரத்தில், கவுரி யாகிய காமாட்சியே! நின்னை மணப்பேம்" என்று சொல்லித் திருமணத்தில் திருவுளம் பற்றினுர். மாயோனை அழைத்தனர். "காமாட்சிக்கும் எனக்கும் மணவிழாச் செய்க" எனக் கட்டளை யிட்டனர். மகிழ்ந்து அங்ஙனமே செய்ய முற்படுவார் மாயவனுர். 'கவுரி திருமணம் காமாட்சி திருமணம்' என மணமுரசு அறையச் செய்தனர். அறையக் கேட்டு அகமகிழ்ந்தார் கேட்டார் எல்லாம். ஏகாம்பர நாதர் திருவருள் பெற்றுத் திருவிழா நடத்தி ஒன்பது நாள் ஆன பின்னர் பத்தாம் நாள் ஆம் பங்குனி உத்தரத்தன்று காமாட்சி கலியாணம் நடத்துவாராயினர் மாயவனுர். பெருமான், மணக்கோலம் கொண்டனர். அட்ட மங்கலங்களும் அணுக அண்ணலார் கலியாண மண்டபம் வந்தனர். ஆதி இலக்குமியும் தனது கணவனுர் கருத்தின்படி காமாட்சியை அலங்கரித்தாள். மேம்பட்டார்க்கு தேவ மங்கையர் சோபனம் பாடினர். அம்மை ஆதி இலக்குமி யின் கையைப் பிடித்து, எழுந்து, பூமழை பொழிய, வானவர் மங்கல வாழ்த்தொலி மல்க, குடைநிழற்றக், கொடி, கவரி சாந்தாற்றி யாதியவற்றை மகளிர் ஏந்த பரவிய ஆடைமேல் மெல்ல மெல்ல நடந்து, மணமண்டபத்திடை வந்து ஓவியக்கொழுந்தென உம்பர் நாதன் பாங்கரில் அமர்ந்தனள். திருமகளாம் ஆதிலட்சுமி தீம்பால் வார்ப்ப, அரங்கசாமியாந் திருமால் குமாரசாமியாம் ஏகாம்பரநாதன் மலரடி விளக்கி மதுப்பருக்கம் ஊட்டி மணமகன் கையில் காமாட்சி கையை வைத்து நீர் பெய்தளித்தான். ஆர்த்தன அளவிலா இயங்கள். பூமழை பொழிந்தது. பிரமன் நூன்முறை செங்கனல்

வளர்ப்ப மணமகன் காமாட்சி மிடற்றில் மங்கல நாணினை வயங்கச் சாத்தினன். "திருமணத் திறங் கண்டவர் யாவரும் செழுந்தேன் பருகு வண்டென ஆநந்த வெள்ளத்திற் படிந்தார்." மங்கலம் பாடினர்.

மணமகன் - ஏகாம்பரநாதன். ஏகம் = ஒன்று, ஆம் பரம் = ஓட்டு மாமரம், நாதன் = தலைவன். (வேதமாகிய) ஒற்றை மாமரத்தடியிலுள்ள நாதன்.

காமாட்சி : காம + அட்சி = காமாட்சி. காமம் = நினைத்தவற்றை யெல்லாம் தரும், அட்சி - கண்ணை யுடையவள். அட்சம் = கண்.

காமாட்சி : கா + மா + அட்சி. கா - சரசுவதி, மா - இலட்சுமி, அட்சி = கண்ணாக உடையவள். சரசுவதியை யும் இலட்சுமியையும் கண்ணாக உடையவள். எனவே கல்வியினையும் செல்வத்தினையும் தம் அடியார்க்குக் கண்ணுற்றருள்பவள் என்பது கருத்தாம்.

காமாட்சி : க + அ + ம + அட்சி. க + அ = கா, கா + ம = காம. காம + அட்சி = காமாட்சி. க - பிரமனையும், அ - விஷ்ணுவினையும், ம - உருத்திரனையும், அட்சி = கண்ணால் படைப்பவள்.

> சுவர்ணாங்கீம் ரத்நபூஷாட்யாம்
> சுகஹஸ்தாம் சுசிஸ்மிதாம் ।
> காஞ்சீ நிவாசிநீம் வந்தே காமாட்சீம்
> காம தார்த்ததாம்॥

பொன்னிற உறுப்புடையவளும் ரத்நாபரண முடையவளும் கிளி தங்கிய கையுடையவளும் புன்சிரிப் புடையவளும் காஞ்சீபுரத்தில் வசிப்பவளும் வேண்டி னவர்க்கு வேண்டியவற்றைத் தருபவளும் ஆகிய காமாட்சியை வணங்குகிறேன்.

# ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்
## தலைமையுரை

இவ்வுரையைத் தாமே எழுதித் தருவதாக ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் பழநியில் 31-1-1942-ல் வாக்களித்தார்கள். அடுத்தநாள் முருகன் திருவடி நீழலடைந்தார்கள். திரிசிராப் பள்ளியில் இத்தலைமையுரையைக் கேட்டுப் பல அன்பர்கள் குறிப்பெடுத்து வைத்தார்கள். இவர்களுள் எவரேனும் அக் குறிப்புக்களை விரித்து எழுதியனுப்பினால் நமது பத்திரிகை யில் வெளியிட நலமாயிருக்கும். சைவர்கள் நன்றியும் உரித் தாகும்.

# சைவ இளைஞர் மகாநாடு

[என்றும் இளையான்]

நமது சமாஜ ஆண்டுவிழாவின் அங்கமாகிய இம்மகா நாடு 26-12-1941-ல் நடைபெற்றது. திருவாளர்-க. அரங்கசாமி முதலியார் அவர்கள் இம்மகாநாட்டைத் திறந்து வைத்தனர். திருவாளர்-ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள் இம்மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார். இவ்விரு வர் முறையே நிகழ்த்திய திறப்புரையும் தலைமையுரையும் சித்தாந்தத்தில் முன்னர் பதிப்பிக்கப்பெற்றன. (இவ்வாண்டு ஜனவரி பிப்ரவரி மாத இதழ்கள் பார்க்க).

திருவாளர்கள்-வித்துவான் - ராஜாக்கண்ணு முதலியார், வித்துவான் - சிவகுருநாதம் பிள்ளை, வித்துவான் - ஆறுமுக முதலியார், நாகப்ப பிள்ளை, காந்திமதி அம்மையார், இளஞ் சைவப் புலவர்-ரா. மகாதேவ செட்டியார் முதலியவர்கள், சைவத்தின் அருமை, பெருமை, தொண்டு, திருமுறைப் பெருமை, சங்க இலக்கியம் பாடுவதெப்படி முதலிய அரும் பொருள்களைப்பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றினார்கள். யோகாசனங்கள் ஒரு தொண்டரால் செய்து காட்டப்பட்டன. பின்பு திரிச்சி நேஷனல் கல்லூரியில் உணவுக்குப்பின் கூடுவ தென்று தீர்மானித்து நூற்றுக்கால் மண்டபத்தில் காலைக் கூட்டம் முடிந்தது.

நேஷனல் கல்லூரியில் உணவுக்குப் பின் இம்மகாநாடு, திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் மீண்டுங் கூடிற்று.பல தீர்மானங்கள் நிறைவேறின. முதன்மை யாகச் சைவ இளைஞர் மகாநாட்டிற்குக் கொடுக்கப்படும் காலம் ஒரு முழுநாளாகவிருக்க வேண்டுமென்றும் குறைந்தது ஆறு இளைஞர்கள் பேசுவதற்கு ஏற்ற வசதியைச் செய்து தரவேண்டுமென்றும் சமாஜப் பொதுக் காரியதரிசியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேறிற்று. திரு. செந் தமிழ்ப் புரவலர் - உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் பிரிந் தமை குறித்திரங்கியது மற்றொரு தீர்மானம். மற்றும் தீர் மானங்கள், தமிழுக்குச் செய்யப்படும் பணி, திருமுறைகள் போற்றப்படும் பணி, தமிழிசை வளர்ச்சிக்குரிய பணி, தமிழ் வித்துவான்கள் நிலை உயர்வுபற்றிய பணி ஆகிய இவைகளைக் குறித்தன. அரசியலாரையும், பல்கலைக் கழகத் தாரையும் இப்பணிகளைச் செய்யுமாறு வேண்டப் பட்டன. இறுதியாகத் தலைவரவர்கள், இளைஞர்களது ஊக்கத்தை யுவந்து பேசியும்,எதிர்காலத்துத் தமிழ்ச் சைவப் பணிகளுக்கு

நல்ல அறிகுறிதோன்றுகின்றதென்று பேசியும் இறைவனை வாழ்த்தி முடித்தனர். திரு. நாகப்பபிள்ளையவர்கள் தலைவரவர்கட்கும், சொற்பொழிவாளர்கட்கும் நன்றி கூறிய பின் இளைஞர் மகாநாடு இனிது நிறைவுற்றது.

அன்றிரவு தமிழ் வித்துவான்கள் கூட்டமொன்று திருவாளர் - கிழக்குமருதூர் - நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல தமிழாசிரியர்கள் கலந்து கொண்டனர். தமிழாசிரியர்கள் நிலை உயர்வுபற்றியும், அவர்களது தனிக்கழகம் நிறுவுவதைப்பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. திரு. நாயுடு அவர்கட்கு, அவர்கள் சங்க இலக்கியம், சீவகசிந்தாமணி என்னும் நூல்கள் வெளிப்படுத்தித் தமிழினபிவிருத்திக்கு ஆன்ற பணிசெய்து வருங் காரணங்கருதியும், சைவச்சங்கங்கள், மகாநாடுகள் இவைகட்குப் பேருதவிபுரிந்து வருங் காரணம் குறித்தும் "தமிழ்ச் சைவத்தாளாண்மையாளர்" என்னும் பெரும்பட்டம் அளிக்க வேண்டுமென்றுந் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த நாள் சைவர் மகாநாட்டில் தலைமைதாங்கிய திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளால் அப்பட்டம் திரு. நாயுடு அவர்களுக்கு ஆசியோடு வழங்கப்பட்டது. திரு. நாயுடு அவர்கள் அனைவர்க்கும் நன்றி கூறித் தாம் செய்யக் கருதும் தொண்டுகளைச் சுருக்கித் தெரிவித்தார்கள்.

# இவ்வாண்டின்
# சமாஜ உத்தியோகஸ்தர்கள்

[ஒவ்வொரு பெயர் முன் "சைவத் திருவாளர்" என்றும், பின் "அவர்கள்" என்றும் சேர்த்து வாசிக்கவும்.]

**தலைவர்**

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் 1-2-1942 வரையில்

திவான்பகதூர் - கீ. தெய்வசிகாமணி முதலியார் 15-3-42 முதல்

**உதவித் தலைவர்கள்**

திவான்பகதூர் - கீ. தெய்வசிகாமணி முதலியார் 14-3-42 வரை

திவான்பகதூர் - டி. எம். நாராயணசுவாமி பிள்ளை 15-3-42 முதல்

ராவ்பகதூர் - சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார்

**பொதுக் காரியதரிசி**

ம. பாலசுப்பிரமணிய முதலியார்

**உதவிக் காரியதரிசி**

ஜி. கலியாணம் பிள்ளை

**பொருட்காப்பாளர்**

தி. க. சுந்தரம் பிள்ளை

**பத்திராசிரியர்**

திரு. வி. உலகநாத முதலியார்

**உதவிப் பத்திராசிரியர்**

மு. அருணாசலம் பிள்ளை

**ஏனைய நிர்வாக சபையினர்**

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

அ. சோமசுந்தரம் செட்டியார்

பூ. ஆலாலசுந்தரம் செட்டியார்

க. சுந்தர விநாயக முதலியார்

ச. நடேச முதலியார்

பி. தியாகராஜ பிள்ளை

ச. நமசிவாய முதலியார்

பூ. சமரபுரி முதலியார்

ரா. சண்முகசுந்தரம் செட்டியார்

கா. இராமநாதன் செட்டியார்

ச. சச்சிதாநந்தம் பிள்ளை

வே. தியாகராய முதலியார்

**வரவேற்புக் காரியதரிசி**

ஸ்ரீகாழி திருவேங்கட பிள்ளை

**மாதக் கணக்குப் பரிசோதகர்**

க. இரத்தின முதலியார்

**ஆண்டுக் கணக்குப் பரிசோதகர்**

ச. வையாபுரிப் பிள்ளை

**பத்திராசிரியர் கழகம்**
**பணியாளர் கழகம்**

மா. வே. நெல்லையப்ப பிள்ளை

ஔவை. துரைசாமிப் பிள்ளை

திரு. வி. உலகநாத முதலியார்

ச. சச்சிதாநந்தம் பிள்ளை

பூ. ஆலாலசுந்தரம் செட்டியார்

சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார்

பி. தியாகராஜ பிள்ளை

ம. பாலசுப்பிரமணிய முதலியார்
மு. அருணாசலம் பிள்ளை

### ஆராய்ச்சிக் கழகம்

ம. சுவாமிநாத சிவாசாரியார்
மு. கதிரேசச் செட்டியார்
ச. சச்சிதாநந்தம் பிள்ளை
கா. சுப்பிரமணிய பிள்ளை
ந. மு. வேங்கடசாமி நாட்டார்

## வெளியூர் ஆலோசனை சபை

### செங்கற்பட்டு

வீ. திருஞானசம்பந்த முதலியார்
வா. தி. மாசிலாமணி முதலியார்
பெ. கோவிந்தராஜ முதலியார்

### வட ஆர்க்காடு

வடநாங்கூர் அருணாசல முதலியார்
புரிசை முருகேச முதலியார்
ஔவை. துரைசாமிப் பிள்ளை

### தென் ஆர்க்காடு

சொ. இராஜகோபால செட்டியார்
பு. வே. தேவராஜ முதலியார்
என். தண்டபாணிப் பிள்ளை

### தஞ்சாவூர்

அ. கணபதி பிள்ளை
ஐ. குமாரசாமிப் பிள்ளை
எஸ். சதாசிவ முதலியார்

### திரிசிராப்பள்ளி

சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்
எஸ். கனகசபாபதிப் பிள்ளை
அ. ரா. அமிர்தம் செட்டியார்

### இராமநாதபுரம்

தெ. பழ. சித. சதாசிவம் செட்டியார்
டி. எஸ். கந்தசாமி முதலியார்
ரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை

### திருநெல்வேலி

மா. வே. நெல்லையப்ப பிள்ளை
ந. சிவகுருநாத பிள்ளை
தெ. ச. சு. சோமசுந்தரம் பிள்ளை

### மதுரை

வித்வான்-சிவக்கொழுந்து
எஸ். முத்து கருப்ப பிள்ளை
எம். எஸ். பாண்டியன் பிள்ளை

### கோயன்புத்தூர்

சி. கே. சுப்பிரமணிய முதலியார்
துடிசை கிழார் சிதம்பரனார்
எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை

### திருவிதாங்கூர்

ரா. பதுமநாப பிள்ளை

### பெங்களூர்

ஆ. அ. இரத்தினசபாபதி முதலியார்

### நீலகிரி

ஹ. ஆரிகௌடர்

### சேலம்

வே. கனகசபை
அ. மாணிக்கம்
ஆர். வி. இராமசாமி ஐயர்

### புதுக்கோட்டை

வ. பழ. ச. சாமிநாதன் செட்டியார்

### இலங்கை

பண்டிதர் - திருஞானசம்பந்தம்
சு. அண்ணாமலை பிள்ளை

கிறார்கள். உலக மக்களில் ஒவ்வொருவரும் தங்களுடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் "இமையளவும் உபகாரம் அல்லா வொன்றை இயக்கா நிர்க்குணக் கடலாகிய" ஆண்டவனிடத்து ஒப்புவித்தால் இம்மையிலும் மறுமையிலும் எல்லாவித நலங்களையும் பெறலாம். சைவ மக்கள் எல்லோரும் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் கூடுமானால் மற்ற நேரங்களிலும் அடியிற் கண்ட அருட்பாக்களையும் இவை போன்ற பிற அருட்பாக்களையும் ஓதுதல் வேண்டும்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த "வேயுறுதோளி பங்கன்" என்று தொடங்கும் கோளறு பதிகம் - 11 பாட்டுக்கள். அப்பதிகத்தில்

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்த னோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்ற இரண்டு பாட்டுக்களும் முக்கியமாய் ஓதத்தக்கவை.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டுமையோன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே
திண்பால் நமக்கொன் றுகண்டோம் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே.

தப்பி வானந் தரணிகம் பிக்கிலென்
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்
செப்ப மாஞ்சேறைச் செந்நெறி மேவிய
அப்ப னாருளர் அஞ்சுவ தென்னுக்கே.

நம்முடைய தேசமக்கள் அனைவரும் மேற்சொன்னபடி இறைவனை மெய்யன்புடன் வேண்டினால், நம்மை ஒரு துன்பமும் அடையாதென்பது நிச்சயம்; உலகம் முழுமையும் துன்பத்தினின்றும் விடுபட்டு இன்பத்தில் திளைத்து நிற்கும்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

என இவ்வாறாக நமது சமயாசாரியர்கள் முதலிய பெரியோர்கள் வாழ்த்துக் கூறும்போதெல்லாம் தமிழர்கள் உய்க தமிழ்நாடு வாழ்க என்று கூறாமல் உலகமெல்லாம் வாழவேண்டுமென்னும் பரந்த நோக்கத்துடன் வாழ்த்துக் கூறியுள்ளார்

கள். அதுபோல உலகிலுள்ள பல தேசத்து மக்களெல்லாம் தம் தேசத்தினர் தான் வாழவேண்டும் பிற ஜாதியினர் அல்லது தேசத்தினருடைய பொருளைக் கவரவேண்டும் அல்லது அவர்களை அடக்கி ஆளவேண்டும் என்னும் குறுகிய நோக்கமில்லாமல், எல்லா தேசத்தினரும் சுதந்தரத்துடன் வாழவேண்டும் என்னும் பரந்த நோக்கத்துடன், ஜாதி மதம் நிறம் முதலிய வேற்றுமைகளைக் கவனியாமல், உலக மக்கள் எல்லோரும் இறைவனுடைய பிள்ளைகள் என்று கருதி சகோதர உணர்ச்சியுடன் ஒற்றுமையாக வாழ்வார்களானால், உலகத்தில் யுத்தமென்பதே உண்டாகாது. உலக மக்கள் எல்லோரும் இன்பமாக வாழலாம். அக்காலம் விரைவில் வருமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவானாக.

# நக்கீரரும் திருமுருகாற்றுப் படையின் பெருமையும்*

[கொழும்பு - அருள். தியாகராஜா]

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளை நேரே காணும் பெருந்தவமுடையவரும், அவருடன் சற்றேனும் அஞ்சாது வாது செய்தவரும், அப்பெருமான் எமக்குகந்தளித்த இறையனார் களவியல் என்னும் 'அன்பினைந்திணை யென்றறுபது சூத்திரத்திற்கு' தித்திக்குந் தேனிலும் பாலினுமினிய

*கொழும்பு நகரிலுள்ள சிவாலயமாகிய பொன்னம்பலவாணேசர் திருக்கோயிலில் மகா சிவராத்திரித் திருநாளன்று நிகழ்த்திய சொற்பொழிவின் சாரமாகும்.

பொருள் வளஞ் செறிந்த செவ்விய உரையியற்றியவருமான நக்கீரரின் பெருமையும்; கலியுக வரதரும், முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவருமாகிய குன்றமெறிந்த குமர வேளால் விரும்பப்பட்டதும், இவ்வுலகின் கணுள்ளவர்கள் மனமெய் மொழிகளொன்றிப் பேரன்புடன் பாராயணஞ் செய்யின், அவர்கள் வேண்டியவற்றை வேண்டியவாறே உத வுவதுமாகிய திருமுருகாற்றுப்படையின் மாண்பும், எம் மனோரால் அளவிடவல்ல தன்மையவன்று.

தெய்வ நல்லருள் பெற்ற நக்கீரரென்னும் இப்புலவர் பெருமான் மதுரைக் கணக்காயனார் மகனாவர். இவரது இயற் பெயர் கீரனாரென்பது. 'ந' என்பது சிறப்புப் பொருளைத் தருவதோரிடைச் சொல். இவரை ஒருசாரார் சங்கறுக்கும் ஒருவகை வேதியர் குலத்தைச் சார்ந்தவரென்றும், மற்றொரு சாரார் வேளாளர் குலத்தைச் சார்ந்தவரென்றும் கூறுவர். இவரே கடைச்சங்க காலத்திலே சங்கப் பலகையிலே முதலி டம் பெற்றவரென்றும் கூறுப. இவர் பத்துப் பாட்டைச் சேர்ந்த நூலில் திருமுருகாற்றுப் படையும், நெடுநல் வாடையும் இயற்றியுள்ளார். மற்றும் இவர் இயற்றிய பாடல் கள், தொகை நூல்களாகிய நற்றிணையில் 7-உம், நல்ல குறுந் தொகையில் 8-உம், அகநானூற்றில் 17-உம், புறநானூற் றில் 3-உம் ஆக, மொத்தம் 35 ஆகும். பதினோராந் திரு முறையிலுள்ள கைலைபாதி காளத்திபாதியந்தாதி முதலிய 10-பிரபந்தங்களையும் இவரே செய்தனரென்று பழைய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பாவினங்களின் ஒட்ப இட்ப நுட்பங்களை யுணர்ந்த சில புதிய ஆராய்ச்சியாளர்கள், அவற்றை மறுத்து, திருமுருகாற்றுப் படையொழிந்த ஏனைய பத்துப் பிரபந்தங்களெல்லாம் வேறொரு நக்கீரரால் இயற்றப்பட்டனவென்று அறைகின்றனர். இவர் வடமொழி

யில் திருக்காளத்தி ஞானப்பூங்கோதை ஸஹஸ்ர நாமம் என்ற நூலொன்றைச் செய்ததாகக் கூறுவதும் உண்டு.

இவருடைய வரலாற்றை, திருவிளையாடற் புராணம், சீகாளத்திப் புராணம், திருப்பரங்கிரிப் புராணம் முதலிய புராணங்கள் நவலுகின்றன. அவை இங்கு விரிப்பிற் பெருகும். இவர், இறையனார் இயற்றித் தருமிக்குக் கொடுத்த "கொங்குதேர் வாழ்க்கை" என்று தொடங்கும் செய்யுளுக்குக் குற்றங் கூறி அச்சிவபிரானால் வாது செய்ய முடியாமல் நெற்றிக் கண்ணை திறந்து வெருட்டப்பட்டுப் பின் சபிக்கப் பெற்று, பின் அவ்விறைவனாரின் மொழிப்படியே கைலைநோக்கிப் பயணமாகி,காசி, திருக்கேதாரம் முதலிய பல ஸ்தலங்களையும் தரிசித்து இமயமலைச் சாரலை அடைந்தார். அங்கு ஓர் தடாகக் கரையிலுள்ள ஆலமரத்தடியில் தியானத்திலமர்ந்திருந்தனர். அப்பொழுது ஓராலிலையானது தீர்ந்து ஒரு பாதி கரையிலும் மற்றொருபாதி நீரிலும் பட விழுந்தது. நீரில் விழுந்த பகுதி மீனாயும், கரையில் விழுந்த பகுதி மீனையுண்ணும் பறவையாயும், மீன் சலத்திலும், பறவை நிலத்திலுமாக இழுக்க,அப்புதுமையைப் பார்த்து நக்கீரர் சிவபூசையில் தவறினதால், சிவபூசையில் தவறிய 999 பேரையும் ஓர்மலை முழையில் அடைத்து வைத்திருந்த பூதமானது, இவரையும் அவர்களுடன் எடுத்துக் கொண்டுபோய்ச் சேர்த்து வைத்துவிட்டு, உண்ணுதற்கு நீராடப் போயிற்று. அப்பொழுது மற்றையபுலவர்கள் "இவ்வளவு காலமும் நாங்கள் நன்றாய்ச் சுகித்திருந்தோம். இன்று நீர் எங்களுடன் வந்ததால் பூதத்திற்கு இரையாகப் போகின்றோம்" என்று கூறி அழுதனர்கள்.

அப்பொழுது நக்கீரர் [illegible] நின்ற மண்டபங்களுக்கு [illegible] அஞ்சல் என்றருளும் பெருமை [illegible] முருகப்பெரு

மானை நீள நினைந்து மனமுருகி இத்திருமுருகாற்றுப்படை யென்னும் பிரபந்தத்தை அருளிச் செய்தார். உடனே முருகப்பிரான் அப்புலவர் பிரானுக்கு முன்னே தோன்றி, அவரை யுண்ணவந்த பூதத்தைக் கொன்று அவர்களனைவோரையுஞ் சிறைவிடுத்துத் திருவருள் சுரந்தன ரென்பதாம்.

திருமுருகாற்றுப்படை யென்பது, முருகக் கடவுளிடத்தே வழிப்படுத்தும் பெருமையுடைய நூல் எனப் பொருள்படும். இது புலவராற்றுப் படை என்றும் வழங்கும். "புலவராற்றுப்படை புத்தேட்கு முரித்தே" என்பது 'பன்னிரு பாட்டியல்'. இது தொல்காப்பியத்துப் புறத்திணையியலிலுள்ள "ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்பதனால் பேறு பெற்றானொருவன் அதனைப் பெறாத வொருவனுக்குப் பெறுமாறு கூறி அவனை ஆற்றுப் படுத்துவது என்பது பற்றிச் செய்த செய்யுள்.

'முருகக் கடவுளுடைய திருவருளைப் பெற விரும்புவோர் இதனை நியமமாக அன்புடன் பாராயணம் பண்ணினால் எண்ணியவை சித்திக்குமென்றும் இது கண்கூடென்றும் பெரியோர் கூறுவர்.

முருகப் பெருமான், திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை முதலிய ஆறுபடை வீடுகளில் எழுந்தருளி அருள் புரியும் செயலை நக்கீரர் அழகாகத் துதிக்கின்றார். இம்முறை வைப்பையே கச்சியப்ப சிவாசாரியார் தாமருளிச்செய்த கந்தபுராணத்தில் முருகப் பெருமானின் கடவுள் வாழ்த்தில் எடுத்தாண்டிருத்தல் இங்கு இன்

புறுதற்குரிய தொன்றும். குமரகுருபர சுவாமிகளும் தாமி யற்றிய கந்தர் கலிவெண்பாவில்,

" உள்ளமு வந்(து)
ஆறு திருப்பதிகண் டாறெழுத்து மன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே "

என அருளிச் செய்திருத்தலும் உற்று நோக்குதற்குரியதாம்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருச்சிற்றம்பலக்கோவை யாரின் கண்ணே,

" பற்றொன் றிலார் பற்றுந் தில்லைப்பரன் குன்றினின்ற
புற்றொன் றரவன் புதல்வ னெனநீ "

என்று திருப்பரங்கிரி முருகனையும், அப்பரடிகள் தேவாரத்தில் " நஞ்செந்தின் மேய வள்ளி மணாளர்க்குத் தாதை கண்டாய் " என்று செந்தூர்க் கந்தனையும் வாழ்த்தியிருத்தலை நினைத்தொறும், நினைத்தொறும், என் உள்ளத்தில் இன்ப ஊற்றானது " வாக்கிறந் தமுதம் மயிர்க்கா றூறும் தேக்கிடுவது " போலவிருக்கின்றது.

திருப்பரங்குன்றில் தம்மைச் சரணடைந்தவர்களைக் காத்தருளும் திருவடிகளை யுடையவரும், பகைவரைத் தேய்த்த கையினையுடையவரும், தெய்வ அறக் கற்பினையுடைய தெய்வயானைமணாளரும் வேற்படையினால் சூரனை அழித்தவருமாகிய முருகன் வீற்றிருக்கின்றார். அங்கு அவருடைய திருவடியை அடையும் நினைவுடன் வழிபடுபவர்கள் அவற்றைப் பெறுவார்கள்.

திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் வள்ளி மணாளனின் ஆறு திருமுகங்களின் தொழிலும் பன்னிரு திருக்கரங்களின் செய்கைகளும் மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் கூறப்பட்டுள்ளன. இதனை ஒவ்வொருவரும் அறியவேண்டியது அவசியமாகும். குமரகுருபர அடிகள் இவற்றைத்

தாமருளிச்செய்த திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பாவில் இனிது விளக்கியிருக்கின்றார்.

திருவாவினன்குடியில், முருகனை வழிபடும் முனிவர்கள் மரவுரி உடுத்த உடையையும், நரைமுடியையும், தூய்மையான வடிவத்தையும், என்பு தெரியும்படி தவ விரதத்தைப் பூண்ட உடம்பினையும், காமம், கடுஞ்சினத்தைக் கடிந்தவர்களாயும், செற்றம் நீக்கிய மனத்தையுடையவர்களாயும், எல்லா நூல் களையும் ஐயந்திரிபறக் கற்று, அதனைக் கற்றவர்களுக்கு எல்லையாயும் இருப்பவர்கள். அவர்களுக்குப் பின் உருத்திரன், திருமால், இந்திரன், கந்தருவ மகளிர்கள், பதினெண் கணங் களும், முப்பத்து மூவர் தேவரும், பிரம்மாவைச் சிறை யினின்று நீக்கும்படி வேண்டுதற் பொருட்டும், தங்கள் தங் கள் குறைகளை நிவர்த்தி செய்தற் பொருட்டும் சென்று சேவிப்பார்கள்.

திருவேரகத்தில், ஓதல், ஓதுவித்தல் முதலிய அறு தொழிலைச்செய்யும் அந்தணர் நாற்பத்தெட்டு பிராயமா மட் டும் பிரமசரிய விரதங்காத்து, ஈரமாகிய உடையைப் புலர உடுத்திக்கொண்டு, நாப்புடை பெயரும்படி அவருடைய மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு, அப்பெருமானை வாசனை யுள்ள மலர்களால் அர்ச்சிக்கும் முறைமை கூறப்பட்டுள்ளது.

குன்றுதோறாடலில், மலைகள் தோறும் விளையாடுதல் அவருக்கு இயல்பு என்று கூறப்பட்டுள்ளது. எமது ஈழ நாட்டின்கண்ணுள்ள ஸ்ரீகதிர்காம க்ஷேத்திரம், இதனைச் சார்ந்ததென்று அறிஞர் கூறுவர். மலைகளில் வேடுவர்கள் முருகன் திருவுளம் மகிழும்படி குரவைக் கூத்தாடுவார்கள். அவர் வேலனெனவன் தொடுத்த கண்ணியை அணிந்து, சிவந்த ஆடையை உடுத்து, அசோகந்தளிரைச் சூடிக் கொண்டு வீற்றிருப்பான். முருகனுக்குரிய நிலம் மலை நாடா

கும். அவரே இக்குறிஞ்சி நிலத்திற்குத் தெய்வமாகும். இதனாலன்றோ தொல்காப்பியத்தின் கண்ணும், "சேயோன் மேய மைவரை உலகம்" எனக் கூறப்பட்டிருக்கின்றது.

அதுவுமன்றி எம்மையாளுடைய நாயகனாகிய முருகனானவன், அன்பர்கள் ஊர்தோறுமெடுக்கும் திருவிழாக்களிலும், அடியவர்கள் விரும்பி வழிபடும் இடங்களிலும், வேலன்வெறியாடுகளத்திலும், காடு, இளமரக்கா, ஆற்றிடைக்குறை, ஆறு, குளம் முதலிய வேறு பல இடங்களிலும் எழுந்தருளியிருப்பார். மற்றும் அவர் அடியவர் வேண்டிய இடங்களிலெல்லாம் எழுந்தருளியிருப்பார். அவ்விடங்களிலெல்லாம் நீ சென்று முருகனை முகமலரத் துதித்து, கையைத் தலைமேல் வைத்து வாழ்த்தி "கார்த்திகேய! சிவகுமார! மலைமகள் மகனே, பகைவர்க்கு யமன் போன்றவனே! கொற்றவை சிறுவ! நூலறிபுலவ! வள்ளி தெய்வயானை காந்தனே! பெரும் பொருளையுடைய முருகனே!" என்று அவருடைய புகழைத் துதிப்பாயாக. "நின்னுடைய தன்மை யெல்லாம் முற்ற அளவிட்டறிதல் பல்லுயிர்க்கும் அரிதாகையால் நின்னுடைய திருவடிகளைப் பெறவேண்டும் என்று நினைந்து வந்தேன்" என்று நீ கருதியதைச் சொன்னாயோ இல்லையோ அவ்வளவிற்குள் அவருடைய ஏவலாளர்கள் நின் குறையை முருகப் பெருமானிடம் விண்ணப்பம் செய்வார்கள். அப்பொழுது துகிலைப்போல் நுடங்கி அகிலைச் சுமந்து திரியும் அருவியையுடைய பழமுதிர் சோலைக்கு உரிய முருகவேள் உன் முன் தெய்வத் தன்மையுடைய இளமைக் கோலத்துடன் தோன்றி, "நீ பயப்படாதே, உன்வரவை நான் முன்னமே அறிவேன்" என்று அன்புடைய மொழிகளைக் கூறி மிகச்சிறக்க பரிசிலும், பிறரோருவரால் எய்துதற்கரியதுமான வீடுபேற்றையும் தந்தருளுவன்.

ஸ்ரீகுகப் பெருமானிடத்தில் பேரன்பு பூண்ட சிலஅடியவர்கள், நக்கீரரையும் திருமுருகாற்றுப் படையையும் பாராட்டிக் கூறிய சிலவற்றை இங்கு தருவாம்.

'கந்தாநுபூதி சொற்றுக் கந்தாநுபூதிபெற்ற' அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழிலே முருகப் பெருமானே நக்கீரருக்கு 'உலகமுவப்ப' என்று அடியெடுத்துக் கொடுத்ததாகக் கூறுகின்றார்.

"வளவாய்மை சொற்பிரபந்த முளகீரனுக் குகந்தன்
மலர்வாயிலக் கணங்கள் - இயல்போதி
அடிமோனை சொற்கிலங்க உலகாமுவப்ப என்றும்
அருளாலளித் துகந்த பெரியோனே"

என்றும்

"மலைமுகஞ் சுமந்த புலவர் சொற் கொண்டு
வழிதிறந்த செங்கை - வடிவேலா"

"கீதவிசை கூட்டி வேதமொழி சூட்டு
கீரரிசைகேட்ட கிருபைவேளே"

என்றும், மற்றும் அவர் அருளிச்செய்த கந்தரந்தாதியில் "நக்கீரர் சொற்றித்தித்தகதே" எனவும் அருளியிருத்தலை நோக்குவோமாக. இதற்கு உரை வகுத்த வில்லிபுத்தூராழ்வார் தெய்வயானை யம்மையாரின் இன்பானுபாவத்திலும் பார்க்க நக்கீரர் பாடல் முருகனுக்கு இனிமையாயிருந்தது என்று உரைக்கின்றார். திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழில் "ஏர் கொண்ட பொய்கைதனில்..............சீர் கொண்ட நக்கீரனைச் சிறைவிடுத்தவா" என்றும், திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழில் "எங்கள் கீரன் மொழியும் பசுந்தமிழெனுஞ் சொல் வேதநிலை தெரியலாம்" எனவும், செய்யூர்ப் பிள்ளைத்தமிழில் "தவிராத வெவ்வினை தவிர்க்கு முருகாறுந் தரித்தாறெழுத் தோதலாம்" எனவும், சிதம்பரசுவாமிகள் "அருணையங்கிரிநாதன் தமிழ்

மணமுமலைய கீரன் தமிழ் மணமும்" எனக் கூறியிருத்தலை யும், கந்தப்ப தேசிகர் தணிகைச் சந்நிதிமுறையில் "சந்த முரு காற்றுப்படை யகங்கனடுபோரை மாற்றுப் படையாகிவைகு" மென்றும் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர்,

"நக்கீரர் சொன்ன முருகாற்றுப்படைத் தமிழும்
நல்லருணகிரி நாதன் சொல்
புலமையுறு சித்திரச் சந்த ப்ரவாகமும்
புகுதச் செவிக்கு ளார்த்த புகழாளா!"

என்று அருளியிருத்தல் எமக்கு அன்பையும் வியப்பையும் ஒருங்குதருகின்றன.

கச்சியப்ப சிவாசாரியார் கந்த புராணத்தினிறுதியில் "பொய்யற்ற கீரன் முதலாம் புலவோர்புகழ்ந்த ஐயற்கெனது சிறுசொல்லு மொப்பாகுமிப்பார்" என்று துதித்திருத்தலை யாமெல்லோரும் கருத்திற் பதித்து "உன்னிய வுன்னியாங் கிங் குதவுவதாகிய" திருமுருகாற்றுப் படையைத், திரி கரணசுத்தியுடன் ஓதி உய்யும் வழியைக் கடைப்பிடிப்போ மாக. முருகன் இருக்கும்போது இப்போது நடக்கும் உலக மாறுத லொன்றும் எமக்கு ஒரு தீமையும் செய்யாது. அவன் கருணையே திருவுருவமானவனல்லவா?

"முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்."

# சீவக சிந்தாமணியும் சைவமும்*

[திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை]

தமிழ் நாட்டின் தவப்பயனாய், சைவத்தின் பெருங் கருவூலமாய் எம்போல்வார் நாளும் பரவும் குருபரம்பரனாய், இன்று தலைமை தாங்கும் அடிகள் திருவடிகளை மனத்தால் பரவி, கையால் தொழுகின்றேன். சைவநலம் கெழுமிய சான்றோர்களே, தாய்மார்களே!

இன்று இங்கே நடைபெறும் சைவசித்தாந்த மகா சமாசத்தின் ௩௬-வது ஆண்டு விழாவில் நம் சமாசக் காரியதரிசியாரும், இதன் வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் உடல் பொருள் உயிர் என்ற மூன்றையும் ஒருங்கே உரிமைசெய்து சலியாது உழைத்து வருபவரும், சென்ற பல ஆண்டுகளாக என்போன்றாரை இத் துறையில் இயக்கிப் பணிகொள்பவருமாகிய சைவத்திருவாளர் - ம. பாலசுப்பிரமணிய முதலியார், B.A., B.L., அவர்கள், "சீவக சிந்தாமணியும் சைவமும்" என்ற பொருள்பற்றியே பேசுதல் வேண்டும் என்று பணித்தார்கள். பணித்தவர்கள், அந்தமட்டில் நில்லாது அப்பேச்சினை முதற்கண் எழுதிப் போந்து, முக்கால்மணி நேரத்திற்குள் படித்து முடித்தலும் வேண்டும்; "இறந்தநாள் யாவர் மீட்பார்" (2616) எனத் திருத்தக்க தேவர் கூறியுள்ள சீரிய கருத்தை மேற்கொண்டு காலவளவில் கருத்தூன்றி நிற்றல் வேண்டும் என்று சுழறிக் கூறினார்கள். அவர் கூறியவை அனைத்தும் பொன்போற் போற்றத்தக்கன வாதலின், அவற்றை மேற்கொண்டு என் கடமையினை ஆற்றத் தொடங்குகின்றேன். கருத்து வேற்றுமை, குற்றம் குறை

---

*திரிசிராப்பள்ளியில் சமாஜ 36-ம் ஆண்டு விழாவில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவு.

முதலியவற்றைப் பொறுத்தருளுமாறு உங்கள் திருவுள்ளப் பேரருளைப் பெரிதும் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

"சீவக சிந்தாமணியும் சைவமும்" என்ற தலைப்பைக் கண்டதும் சில நண்பர்கள் வியப்புற்றனர். அதனைக் கண்டதும், இவ்யாண்டில் நம் சைவ சித்தாந்த சமாசத்தில் சீவக சிந்தாமணி மூலம் மட்டில் வெளியிடப் பெறுகிறது என்று யான் சொன்னேன்; அது கேட்டதும் அவர்கட்கு வியப்பு மிகுதியாயிற்று. "சீவக சிந்தாமணி யென்பது சமண சமயக் காவியம்; அதற்கும் சைவத்துக்கும் என்ன தொடர்புண்டு?" என்றனர். அவர்கள் நம் சைவத்தின்பால் உள்ள ஆர்வமிகுதியால் அவ்வாறு கேட்கின்றனர் என்பதனை யான் நன்கு தெரிந்துகொண்டேன். புறச்சமய நெறிநின்று அகச் சமயம் புகுதலும் பிறவும் சைவத்துக்கு உடன்பாடாகும். புறச்சமய நூல்களைப் பயின்று சைவத்தின் மாண்பு காண்பதும் ஒருவகை அறிவுநெறியே என்று நாவரசர் வரலாறு நமக்குக் காட்டுகின்றது. இதனால், சைவர் அனைவரும் புறச் சமய நூல் பலவும் வரைவின்றிக் கற்றல்வேண்டுமென்று வற்புறுத்துகின்றேனென்று துணிதல் கூடாது. புறச்சமய நூல்களுள்ளும் சீரிய நலமுடையவையுளவாயின், அவற்றைக் கற்றல் குற்றமின்று; அக்கற்றறிவால் நம் சைவத்தின் தனிப் பெருமாண்பினை நன்கு தெளிய உணர்தல் கூடுமென்பதே பேறிஞர் பலர் கருத்து.

னள். சீவகன், கந்துக்கடன் என்பானால் எடுத்துவளர்க்கப் பெற்று, அச்சணந்தி என்னும் சமண முனிவன்பால் பலகலைகளையும் கற்பிக்கப்பெற்றான். பின்பு இவன், தன் பிறப்பு வரலாறு ஆசிரியனால் உணர்ந்து, அவனை தேற்றத் தேறியிருக்கையில், அங்ககரத்து ஆயாது ஆனிரையைக் கவர்ந்த வேட்டுவரை ஆளற்றம் நேராத வகையில் வென்று வீறுபெற்றான். பின்னர், இச்சீவகன் காந்தருவதத்தை யென்பவளை இசையால் வென்றும், குணமாலை யென்பவளை அசனிவேகம் என்னும் யானையினின்று காத்துக் காதலுற்றும் மணந்து கொண்டான். இவ்வாறே பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்ற ஆறு மகளிரை மணம் செய்துகொண்டு சிறப்புற்றான். இலக்கணையை மணப்பதற்கு முன், தன் தாயைக் கண்டு, அவள் பணித்தவாறே, தாய்மாமனான கோவிந்தராசன் என்பவனைத் துணைகொண்டு கட்டியங்காரனை வென்று தன் அரசுரிமை எய்தினான். முடிவில், இச்சீவகன், நன்மக்கள் பலரைப் பயந்து, அவர்பால் தன் அரசினை வைத்துத் தான் துறவுபூண்டு, இறுதியாக, பரிநிருவாணம் பெற்றான். இதுவே, சீவக சிந்தாமணியில் அடங்கிய கதை.

இதனை, இனிய அழகிய தமிழ்ப் பாக்களால் நமக்கு உணர்த்தருளிய சான்றோர் திருத்தக்க தேவர் என்ற சமண முனிவராவார். இவர் சோழர் குலத்தவர் என்று சைனர் கூறுகின்றனர். இவர் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருந்தவர் என ஆராய்ச்சியாளர் முடிவுகண்டுள்ளனர். இவர் வடமொழி, தமிழ் மொழி என்ற இரண்டினும் சிறந்த புலமையும், தமிழில் அரிய புலவன்மையும் உடையவர்.

(தொடரும்)

2. ஷெ இடத்தில் நமது சமாஜப் பொதுக்கூட்டம் ஒன்று தமிழ் வருஷப் பிறப்பு நாளாகிய 13-4-1942 திங்கட்கிழமை மாலை $5\frac{1}{2}$ மணிக்கு நடைபெறும். சைவத்திருவாளர் - ராவ்பகதூர் - சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் "நால்வர் நல்வழி" என்பது பற்றி ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். அன்பர்கள் அனைவரும் வருக.

---

## ஞானியார் சுவாமிகள் நினைவு நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் வெளிவந்த பிறகு பல கூட்டங்களின் நடவடிக்கைகளும் பல புலவர்களுடைய பாடல்களும் வந்தன. அவைகளை வெளியிடுவதற்கு இயலாமையை அன்பர்கள் பொறுத்தருள வேண்டுகிறோம். யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை 14-3-42-ல் கீழே காணும் தீர்மானத்தை நிறைவேற்றிய செய்தியைக் காரிய தரிசி திரு. மு. மயில்வாகனம் அவர்கள் அன்பு கூர்ந்து தெரிவித்துள்ளார்கள். தீர்மானம் :—"தென்னிந்தியாவிலே சென்ற பல ஆண்டுகளாகச் சிறந்த சைவப் பிரசங்கங்களைச் செய்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தவரும், தமிழ்நாட்டிலே சைவத்தை வளர்த்தவரும் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் தாதாவுமாகிய ஸ்ரீலஸ்ரீ திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகளுடைய பிரிவைக் குறித்து இச்சபை பெரிதும் அநுதாபப்படுகிறது."

---

## "வள்ளி வேட்கை" அரங்கேற்று விழா

கந்தபுராணத்துள் வள்ளியம்மையார் வரலாற்றினைத் தூய முறையில் தொகுத்து 366 விருத்தப்பாடல்களால் பன்னிரு படலங்களில் சைவத்திருவாளர் கடையநல்லூர் உ. பொ. முத்துராமலிங்கம் பிள்ளையவர்கள் இயற்றியுள்ளார்கள். "வள்ளி வேட்கை" எனப் பெயரிய இந்நூலுக்குப் பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியார், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், சிவக்கவிமணி - சி. கே. சுப்பிரமணிய முதலியார், ராவ்சாஹிப் எஸ். வையாபுரி பிள்ளை முதலிய பல பேரறிஞர்கள் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளார்கள். இந்நூல் 22-4-1942 புதன்கிழமையன்று காலை 6 மணிக்குத் திருச்செந்தூர் முருகப்பெருமான் சந்நிதியில் அரங்கேற்றப்பெறும். இந்நூலின் விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் தூத்துக்குடியில் செவ்வேளகத்திலிருக்கும் இந்நூலாசிரியருக்குப் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். முருகபக்தியுடைய ஒவ்வொருவரும் இந்நூலை வாங்கி வாசிக்கவேண்டியது மிக அவசியம்.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 15. No. 4


# சமாஜ வெளியீடுகள்

# CATALOGUE OF SAMAJAM BOOKS

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| சம்பந்தர் தேவாரம் (அரும்பொருளகராதியுடன்) | .... | 1 | 4 |
| அப்பர் தேவாரம் ,, | ... | 1 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் | .... | 0 | 12 |
| திருவாசகம் ,, | .... | 0 | 10 |
| ,, (பல ஆராய்ச்சி அகராதிகளுடன்) | .... | 0 | 12 |
| திருவாசகம் மூலம் | ... | 0 | 2½ |
| திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு—குறிப்புரையுடன் | .... | 0 | 9 |
| அ, கூ திருமுறைகள் ,, | .... | 1 | 2 |
| திருமந்திரம் — (இரண்டாம் பதிப்பு) | .... | 1 | 0 |
| பதினோராந் திருமுறை ,, | .... | 0 | 11 |
| பெரியபுராணம் ,, | .... | 1 | 6 |
| மெய்கண்டாரும் சிவஞான போதமும் | .... | 0 | 8 |
| சங்கநூற்புலவரகராதி | .... | 0 | 1 |
| தலயாத்திரைப் படம் | .... | 0 | 1 |
| திருப்புகழ் (அருணகிரியார் அருளியவை முற்றும்) | | 3 | 0 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை | ... | 0 | 10 |
| சங்க இலக்கியம் in 2 Vols. | .... | 3 | 8 |
| சீவக சிந்தாமணி | .... | 1 | 8 |
| சிவஞானபாடியம் | .... | 1 | 0 |
| சிவஞானபோதச் சிற்றுரை | .... | 0 | 8 |
| சிவஞான சித்தியார் உரை | .... | 0 | 12 |
| சிவப்பிரகாசம் மூலமும் உரையும் | .... | 1 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் | .... | 1 | 0 |
| சித்தாந்த சாத்திரம் மூலமும் உரையும் | .... | 3 | 0 |

தபாற்கூலி, பார்சல் செலவு முதலியன வாங்குவோர் செலுத்த வேண்டும். முன்பணம் அனுப்புக.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர் சென்னை


Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.